**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்</u>**

அ.வ.எண்.33/2022

பெயர் – பாண்டியம்மாள் (வா.சா.1)

நாள் – 16.03.2026

**<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை.</u>**

1) அ.வ.எண்.31/2022 தாக்கல் செய்துள்ள ராமலிங்கம் எனது கணவர் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள பிராது, நிரூபண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் அனைத்தும் யார் தெரிவித்தன் பேரில் இயற்றப்பட்டது என்றால் நானும், எனது கணவரும் சொல்லி தான் இயற்றப்பட்டது. வழக்கு சொத்து ஆதியில் எனது பாட்டி காமாட்சியம்மாளுக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். வழக்கு சொத்து எனக்கு எவ்வாறு பாத்தியப்பட்டது என்றால் காமாட்சியம்மாள் மகள் முத்தம்மாள் எனது தாயார் ஆவார், அதன் மூலம் பாத்தியப்பட்டது.

2) வழக்கு சொத்து எனது தாயாருக்கு எவ்வாறு பாத்தியப்பட்டது என்றால் காமாட்சியம்மாள் எனது அம்மாவுக்கு எழுதிக் கொடுத்தார். காமாட்சியம்மாள் எவ்வாறு வழக்கு சொத்தை எனது அம்மாவுக்கு எழுதிக் கொடுத்தார் என்றால் உயில் மூலம் எழுதிக் கொடுத்தார். மேற்கூறிய சங்கதிகளுக்கு சான்றாக ஆவணங்கள் இந்நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். எனது அம்மா இரண்டு நபர்களுக்கு தான்செட்டிமெண்ட் எழுதிக் கொடுத்திருந்தார் என்றால் சரிதான். எனது அம்மா சோலைச்சாமிக்கும், பாண்டியம்மாள், மாரீஸ்வரி ஆகியோருக்கு 2008 ம் ஆண்டு தானசெட்டில்மெண்ட் எழுதிக் கொடுத்துள்ளார் என்று நிரூபண வாக்குமூலத்தில் கூறியுள்ளேனா என்றால் 2014 ம் ஆண்டு எழுதிக் கொடுக்கப்பட்டது.

3) இவ்வழக்கின் விபரம் எதுவும் எனக்கு தெரியவில்லை என்றும், எனது கணவரின் தூண்டுதலின் பேரில் தான் இவ்வழக்கை தொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. 2014 ம் ஆண்டு தானசெட்டில்மெண்ட் மூலம் எனக்கு பாத்தியப்பட்ட இடத்திற்கு இன்னால் வரை பட்டா எதுவும் பெறவில்லை என்றால் சரிதான். துர்க்கைபாண்டியன் என்பவரின் இடத்தை நான் ஆக்கிரமிப்பு செய்துள்ள காரணத்தினால் பட்டா எனக்கு கிடைக்கவில்லை என்றால் சரியல்ல.

4) 1, 2 பிரதிவாதிகள் எனக்கு எவ்வித இடைஞ்சலும் செய்யவில்லை என்றால் சரியல்ல. எங்கள் வீடு இருக்கும் இடத்திற்கு மேற்கே பிரதிவாதிகள் இடம் உள்ளது என்றால் சரிதான். பிரதிவாதிகள் வீட்டிற்கும், எனது வீட்டிற்கும் இடையே உள்ள பாதையின் அளவு எவ்வளவு அகலம் என்றால் 11 அடி அகலம் ஆகும். நீதிமன்ற ஆணையர் மூலம் இடத்தை அளவீடு செய்தால் உண்மை நிலவரம் தெரியவரும் என்றால் சரிதான்.

5) தானசெட்டில்மெண்ட் படி வழக்கு சொத்து எனக்கு பாத்தியப்பட்டது என்று நிவாரணம் கோராமல் இடைஞ்சல் செய்யக்கூடாது என்று மட்டுமே நிரந்தரஉறுத்துக்கட்டளை பரிகாரம் இவ்வழக்கில் கேட்டுள்ளேன் என்றால் சரிதான். நான் காவல் நிலையத்தில் புகார் அளித்தற்கு சான்றாக ரசீது எதுவும் வழங்கப்பட்டதா என்றால் அதுகுறித்து எனக்கு தெரியாது. உண்மையில் பிரதிவாதிகள் இடைஞ்சல் செய்யாததால் தான் நான் புகார் அளித்தற்கு மனு ரசீது எதுவும் வழங்கப்படவில்லை என்றால் சரியல்ல.

6) தான பாத்திரத்தில் சொல்லப்பட்ட அளவுகளை மீறி கூடுதலாக ஆக்கிரமிப்பு செய்து பாத்ரூம் கட்டியுள்ளோம் என்றும், பிரதிவாதிகளுக்கு இதனால் இடையூறு ஏற்பட்டது என்றும், பிரதிவாதிகள் இதுகுறித்து முறையிட்டதற்கு இவ்வழக்கை தற்காத்து கொள்வதற்காக இவ்வழக்கை தொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. இடத்தை அளவீடு செய்ய அதிகாரிகள் வந்த சமயத்தில் நாங்கள் தான் இடையூறு செய்தோம் என்றால் சரியல்ல. அளவீடு செய்ய வந்த அதிகாரிகள் நாங்கள் பொதுபாதையின் இடத்தை ஆக்கிரமித்து பாத்ரூம் கட்டியுள்ளோம் என்றும், அதனை அகற்ற வேண்டும் என்றும் கூறியுள்ளனர் என்றால் சரியல்ல. எனவே இவ்வழக்கானது தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. 1, 2 பிரதிவாதிகள் மீது வழக்கானது சோடனை செய்து பின்னிட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.